தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 05.11.2026

முன்னிலை

திரு. அபய் குமார் சிங் இ.கா.ப (ஓய்வு)

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண். CP 5873/F/2024

திரு.K.பாலசுப்பிரமணியன் -- புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்,
உதவி ஆணையர்,
மாநகராட்சி அலுவலகம்,
பாளை ரோடு,
தூத்துக்குடி - 628 002. -- பொது அதிகார அமைப்பு

ஆணை -1

இவ்வழக்கின் மீதான நேரடி விசாரணை 24.09.2026 அன்று மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.முனீர் அகமது, உதவி செயற்பொறியாளர் (பொ), தூத்துக்குடி மாநகராட்சி, தூத்தக்குடி மாவட்டம் அவர்கள் இன்று (05.11.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ***திரு.சுரேஷ் குமார், உதவி ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம்*** அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினையும் மற்றும் 24.09.2026 அன்று ஆணையம் பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து 03.11.2026 நாளிட்டு கடிதத்தில் சட்டப்பிரிவு 19(8)(b)-ன்கீழ் இழப்பீட்டு தொகையான ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மனுதாரருக்கு வழங்கிவிட்டு அவர் பெற்றுக்கொண்டதற்கான வங்கி வரைவோலை நகலினையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்பித்தார்.

"அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தில் மனுதாரரின் 18.12.2024-ஆம் தேதிய மனுவிற்கு உரிய தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்."

2. மேலும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ***திரு.சுரேஷ் குமார், உதவி ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் அளிக்கப்பட்ட*** விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை. எனவே, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களுக்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.சுரேஷ் குமார், உதவி ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1)-ன் கீழ் அபராதம் ரூ.3000/- (ரூபாய் மூவாயிரம் மட்டும்) விதித்து ஆணையிடுகிறது. இதனை உரிய அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை 03.12.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.***

ஒம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். CP 5873/F/2024

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   உதவி ஆணையர்,
   தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம்,
   பாளை ரோடு,
   தூத்துக்குடி - 628 002.

2. **(அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்)**
   திரு.சுரேஷ் குமார்,
   உதவி ஆணையர்,
   தூத்துக்குடி மாநகராட்சி,
   தூத்துக்குடி மாவட்டம்
   (தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)

மனுதாரர்

திரு.R.பாலசுப்பிரமணியன்,
எண்.13, பங்களாத் தெரு,
சிவந்தாகுளம்,
தூத்துக்குடி - 628 003.
செல் - 99947 70999

நகல்

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RV/PA